**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.77/2009</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **10.03.2026** |
| **பெயர்** | **பத்மநாபன்** |
| **த/பெ** | **சங்கர்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.50 எ.எம்.**

**<u>6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. இவ்வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தினை என்னுடையது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் விஸ்தீர்ணம் என்ன என்றால் சேர்பேடு கிராமம் சர்வே எண் 71/1டி–ல் 73 செண்ட். யாருக்கு உரிமையான சொத்து என்றால் ருத்ரப்பரெட்டியின் மகனான ஆண்டியப்பரெட்டிக்கு சொந்தமானது. ஆண்டியப்பரெட்டி தற்போது உயிருடன் இல்லை. சொத்து எனக்கு எப்படி கிடைக்கப்பெற்றது என்றால் கூர்சிட்டின் மூலம் கிடைக்கப்பெற்றது. நான் ஆண்டியப்பரெட்டிக்கு என்ன உறவு முறை என்றால் அவரின் பேரன்.

2. ஆண்டியப்பரெட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒரே மகன். அவர் பெயர் சங்கரன், எனது தந்தை ஆவார். என்னுடன் பிறந்தவர்கள் 3 நபர்கள் அவர்கள் செல்வம், கௌசல்யா மற்றும் பத்மநாபன். அதில் செல்வம் இறந்துவிட்டார். மேற்சொன்ன கூர்சிட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கூர்சிட்டு எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 12.12.2007 எழுதப்பட்டது. நான் கூறும் கூர்சிட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்திருந்தால் அதனை என்ன ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியுமா என்றால் தெரியவில்லை.

3. என் தாயார் உயிருடன் உள்ளரா என்றால் இல்லை. மோகனசுந்தரம்

மற்றும் யுவராணி யார் என்றால் என் அண்ணனின் பிள்ளைகள். தாவா சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது என் தாத்தா கிரையம் பெற்ற சொத்தாகும். எந்த வருடம் என் தாத்தா வாங்கினார் என்றால் 1935. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 12—ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் வழக்கு சொத்தின் சர்வே எண் உள்ளது என்றால் சர்வே எண் 96/3 வழக்கு சொத்தின் பழைய பைமாஸ் எண் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ 1 ல் பைமாஸ் எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று சாட்சியிடம் ஆவணம் காட்டி கேட்டதற்கு சாட்சி அவ்வாறு குறிப்பிடவில்லை என்று கூறினார். வா.சா.ஆ1ல் நஞ்சை சர்வே எண் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. பட்டா எண் தவறுதலாக நான் சொல்வது போல் சண்முகரெட்டியின் மகன் ஆண்டியப்பரெட்டி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் ஆண்டு நினைவில் இல்லை. தோராயமாக 40 வருடம் இருக்குமா என்றால் இருக்கும். தற்போது எனக்கு வயது 51. தவறுதலாக பட்டா மாற்றம் செய்யபட்டதற்கு என்ன நடவடிக்கை எடுத்தோமா என்றால் எடுத்தோம். சண்முகரெட்டியின் மகன் ஆண்டியப்பரெட்டி நான் கூறியதன் பெயரில் தாசில்தாரிடம் மனு கொடுத்தார். மேற்சொன்ன மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோனா என்றால் ஆம். என்ன ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை.

5. அது போல் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த வருடம் ஆட்சேபணை இல்லா கடிதம் ஆண்டியப்பரெட்டியிடம் இருந்து நான் வாங்கினேன் என்றால் 1998—ல் நான் வாங்கினேன். மேற்சொன்னவாறு எந்த ஒரு கடிதமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 6—ம் பிரதிவாதி முரளிகிருஷ்ணனிடம் தான் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது பிராதில் 02.08.2008 ல் தைலமரம் வெட்டியதாக கூறியுள்ளேன். அதை யார் வெட்டியது என்றால் 2—ம் பிரதிவாதியான சிகாமணி என்பவர் அவரே வெட்டிகொண்டு சென்றுவிட்டார். அதனை எதிர்த்து நான் காவல்துறையில் புகாரும் அளித்தேன். அதனுடைய மதிப்பு ரூ. 5,00,000/— இருக்குமா என்றால் இருக்கும். மேற்சொன்ன சங்கதியை எதிர்த்து சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் காவல்நிலையத்தில் புகார் மட்டும் அளித்தேன். காவல் நிலையத்தில் நீதிமன்றத்தை நாடுமாறு கூறினார்கள்.

6. தாவா சொத்தில் 1மற்றும் 2—ம் பிரதிவாதிகளின் தந்தை வழி பாட்டனாரான ஆண்டியப்பரெட்டிக்கு சொந்தமானதா என்றால் சரியல்ல.

ருத்ரப்பரெட்டியின் மகனான ஆண்டியப்பரெட்டிக்கு சொந்தமனாது. மேற்சொன்ன அடிப்படையில் தான் 3ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் கொடுத்து நான்கு மற்றும் 5ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தார்கள் என்றால் ஒரே மாதிரியான பெயரினை தவறாக பயன்படுத்தி கிரையம் செய்துவிட்டார்கள். வழக்கு சொத்தின 6ம் பிரதிவாதி 2011ல் கிரையம் பெற்றார்என்றால் ஆம். 6ம் பிரதிவாதியை எதிர்த்து நான் இவ்வழக்கில் ஏதேனும் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். என்ன பரிகாரம் என்றால் அவருக்கு செய்த கிரையம் செல்லாது என்று கோரியுள்ளேன்.

7. முதலில் வழக்கு சொத்து 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்பதால் தான் அவர்கள் தைல மரத்தை வெட்டி கொண்டு சென்ற போது கூட எந்த ஒருசட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல காவல்நிலையத்தில் புகார் அளித்தோம். வா.சா.ஆ1 க்கும் வழக்கு சொத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் 1998ல் நான் கூறும் ஆண்டியப்பரெட்டி என் பெயருக்கு ஆட்சேபணையில்லா கடிதம் கொடுத்திருந்தால் அதனை எதிரத்து நான் பட்டா மாற்றம் செய்திருப்பேன் என்றால் சண்முகரெட்டியின் மகனான ஆண்டியப்பரெட்டி உடல்நிலை சரியில்லாத இருந்தது அதனால் தான் பட்டா மாற்றம் செய்ய இயலவில்லை. ஆட்சேபணையில்லா கடிதம் கொடுத்த பிறகு எதற்காக பட்டா மாற்றம் செய்ய அவர் வர இருந்தது என்றால் பட்டா மாற்றம் செய்ய அவரை நேரில் அழைத்தார்கள். தற்போது சண்முகரெட்டியின் மகனான ஆண்டியப்பரெட்டி உயிருடன் இல்லை அவர் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது.

8. பட்டா மாற்றம் செய்ததை எதிர்த்து வருவாய் துறையினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்தோமா என்றால் எதுவும் எடுக்கவில்லை. வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாத காரணத்தினால் தான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அப்போது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்களுக்கு தெரியமால் இருந்தது. வழக்கு சொத்து முதலில் இருந்து சண்முகரெட்டியின் மகனான ஆண்டியப்பரெட்டிக்கும் அதன் பிறகு பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் பாட்டனார் அவருக்கு பிறகு என் தந்தை அவருக்கு பிறகு நாங்கள் தான் வழக்கு சொத்தில் இருந்து வருகிறோம். என் தாத்தாவான ருத்ரப்பரெட்டியின் மகனான ஆண்டியப்பரெட்டிக்கு சேர்பேடு கிராமத்தில வேறு நிலங்கள் உள்ளது என்றால் உள்ளது. வா.சா.ஆ 2 ல் உள்ள ரசீதுகள் ஆண்டியப்பரெட்டியின் வேறு நிலங்களுக்கான ரசீதுகள் என்றால்

சரியல்ல. உண்மையாகவே இந்த வழக்கு சொத்து என் தாத்தா மற்றும் தந்தைக்கு உரிமையாக இருந்திருந்தால் அவர்கள் உரிமையை கோரும் வகையில் ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் அவர்கள் இறந்த பிறகு தான் இந்த விவரம் எனக்கு தெரியவந்தது அதனால் அவர்கள் ஏதேனும் நடவடிக்கை எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை அபகரிக்கும் எண்ணத்தோடு ஒரே மாதிரியான பெயர்களை பயன்படுத்தி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 6—ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கில் எந்த உரிமையும் கோராத காரணத்தினால் அவருக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படி வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.27.p.m.**